**பிரித்தானிய அரசாங்க நிதி உதவியை பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் (யூகே இரும்புப் பாலங்கள் செயற்திட்டம்) செயற்திட்டம் II - 2016**

---

பிரித்தானிய அரசாங்க நிதி உதவியை பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் (யூகே இரும்புப் பாலங்கள் செயற்திட்டம்) செயற்திட்டம் II இன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஹாங்காங் மற்றும் வரையறுக்கப்பட்ட ஷாங்காய் பேங்கிங் கோப்பரேசன் (எச்எஸ்பீசி) இற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 21 ஆந் திகதிய 53எம்/எவ்சீ/1448(201327/எஸ்எல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 01 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. உருக்கு இரும்பு மூலப்பொருளின் வடிவமைப்பு, அளவியல் மற்றும் விநியோகம் மற்றும் 104 கிராமியப் பாலங்களின் நிர்மாணம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணியினருக்கு அவற்றிற்கான தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை வழங்குதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். மேற்குறித்த நோக்கத்திற்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2012 ஏப்ரல் 26 இல் வெளிநாட்டுக் கம்பனியொன்றுடன் ஒப்பந்த உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 12,275.13 மில்லியனுக்குச் சமனான ஸ்ரேலிங் டவுன் 56.50 மில்லியன் (ஐக்கிய அமெரிக்க டொலர் 88.72 மில்லியன்) காணப்பட்டதுடன் அதில் ரூபா 9,775.13 மில்லியனுக்குச் சமனான ஸ்ரேலிங் டவுன் 45 மில்லியனை (ஐக்கிய அமெரிக்க டொலர் 70.65 மில்லியன்) நிதியளிப்புச் செய்வதற்கு ஹாங்காங் மற்றும் வரையறுக்கப்பட்ட ஷாங்காய் பேங்கிங் கோப்பரேசன் இனால் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 செப்தம்பர் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தம்பர் 18 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில்

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்.

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்.

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்.

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஊ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்.

(எ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

சிவில் வேலைகள், மின்சார இணைப்புக்களின் இடமாற்றுகை மற்றும் வீதி சமிக்கை நிர்மாணம் மற்றும் ஏனையவை என்பவற்றின் மீது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்தங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 88.92 மில்லியன் தொகையொன்று நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதிகளின் பயன்பாடு மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினங்களுடன் தொடர்புடைய சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| எச்எஸ்பீசீ | 70.65 | 9,775.13 | 1,050.00 | 7.01 | 1,012.97 | 67.73 | 8,995.72 |
| ஜிஓஎஸ்எல் | 18.07 | 2,500.00 | 580.00 | 3.50 | 531.00 | 11.12 | 1,644.93 |
| **மொத்தம்** | **88.72** | **12,275.13** | **1,630.00** | **10.51** | **1,543.97** | **78.85** | **10,640.65** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், ஒப்பந்தத்திற்கான அளவயியல், வடிவமைப்பு, தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சியினை வழங்குதல் மற்றும் 3,077.90 மீற்றர் நீளத்துடனான 104 கிராமிய பாலங்களுக்கு மூலப்பொருட்களின் விநியோகத்திற்கான வேலைகளின் ரூபா 9,778.05 மில்லியனுக்குச் சமமான ஸ்ரேலிங் பவுன் 45 மில்லியன் (ஐக்கிய அமெரிக்க டொலர் 70.65 மில்லியன்) கிரயமொன்றில் வெளிநாட்டு கம்பனியொன்றுடன் கைச்சாத்திடப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 வரை 07 சந்தர்ப்பங்களில் மாற்றஞ்செய்யப்பட்டிருந்தது. ஆகையினால், 16 பக்கவழி பாலங்கள் மற்றும் 02 கலப்பு பாலங்கள் உள்ளடங்களாக 3,142 மீட்டர் நீளமான 80 பாலங்களின் நிர்மாணத்திற்கு இரும்பு உருக்கு மூலப்பொருட்கள் விநியோகிப்பதற்கு இனங்கப்பட்டது. அவற்றில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 16 பக்கவழி பாலங்கள் மற்றும் கலப்புப் பாலமொன்றும் உள்ளடங்களாக 66 பாலங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தத்காரரின் தோல்வி காரணமாக மீளாய்வாண்டின் போது கொழும்பு மாவட்டத்திலுள்ள கலுஅகல்லயிலுள்ள பாலமொன்றின் நிர்மாண வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தது. வேலைகளின் முடிவுறுத்தல் நேரத்தில் ரூபா 15.51 மில்லியன் மேற்கட்டுமான கிரயம் உள்ளடங்களாக ரூபா 45.78 மில்லியன் தொகையொன்று செலவழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், பொலநறுவை மாவட்டத்திலுள்ள கும்புக்கன் ஆற்றினை குறுக்கறுக்கும் வேறு பாலமொன்றின் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்ததுடன் கொங்கிரீட் பாலமொன்றினை நிர்மாணிப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டது. ஒப்பந்ததார்க்கு அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நகர்வு முற்பணங்கள் ரூபா 3.04 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 வரை தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்படுகின்றது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் 34 ஒப்பந்தங்களுக்கு 31 நாட்களிலிருந்து 453 நாட்கள் வரையான வீச்சில் கால நீடிப்பு அளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவற்றில், செயற்திட்டத்தினால் இழிவளவாக்க முடியததாக காணப்பட்ட வடிவமைப்புக்களில் மாற்றங்கள், வேலைகளின் வரையறை, மேலதிக வேலைகள் மற்றும் மூலப் பொருட்கள் மற்றும் ஏனைய உள்ளீடுகளில் கிடைப்பனவின்மை போன்ற பல்வேறு காரணங்கள் காரணமாக 14 ஒப்பந்தங்களுக்கு கால நீடிப்புக்கள் அளிக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட கண்காணிப்பு அலகுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 65 நிரந்தர பாலங்களில், 49 நிரந்தரப் பாலங்களின் வடிவமைப்பு வேலைகள் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், அந்தப் பாலங்களின் வடிவமைப்பு வேலைகள் வெளிநாட்டு கம்பனியினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டிக்கொண்டிருந்த போதிலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பால வடிவமைப்பு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றிற்கு ரூபா 9.24 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 நிதிக்கட்டுப்பாட்டின் மீதான விடயங்கள்

தேறிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனொன்றில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2014 இல் ரூபா 327 மில்லியன் தொகையான ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு எவ்வித ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியவைகளாக காட்டப்பட்டிருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அவற்றிக்கு எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்காத போதிலும், செயற்திட்டத்தினால் 05 ஆலோசகர்கள் மற்றும் 04 பொது இணைப்பு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2.03 மில்லியன் கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.